# ஆட்டோ ஓட்டுநரின் உடல் உறுப்புகள் தானம்

**சென்னை, ஜன.19:** சாலை விபத்து ஏற்பட்டு மூளைச் சாவு அடைந்த ஆட்டோ ஓட்டுநரின் 6 உடல் உறுப்புகள் தானம் அளிக்கப்பட்டன.

காஞ்சிபுரம் கோரிக்கல் கிராமத்தைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் ஸ்ரீதர் (31). இவர் காணும் பொங்கலன்று, சாலை விபத்தல் படுகாயம் அடைந்தார். காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட இவர், உயர் சிகிச்சைக்கு மியாட் மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டார். மியாட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மூளைச் சாவு அடைந்ததாக மருத்துவர்கள் உறுதி செய்தனர்.

இதையடுத்து, அவரது உடல் உறுப்புகளை தானம் அளிக்க, உறவினர்கள் முன் வந்தனர். அவரது கண்கள், இதயம், கல்லீரல், சிறுநீரகங்கள் ஆகிய 6 உறுப்புகள் தானம் பெறப்பட்டன. இதயம், கல்லீரல், ஒரு சிறுநீரகம் ஆகியவை அதே மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்குப் பொருத்தப்பட்டன.

கண்கள், மற்றொரு சிறுநீரகம் ஆகியவை சென்னையில் உள்ள வேறு மருத்துவமனைக்குத் தானமாக அளிக்கப்பட்டது.